# பனித்துளி செய்திகள்!

"அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!" (சங்கீதம் 33:9)
துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!

(திங்கள்தோறும்)

**18.11.2024**

## 47. கர்த்தரோடு தனிப்பட்ட உறவில் அருளப்படுவதே "வாக்குதத்தம்!"

"நீர் எனக்குத் தந்த வாக்குதத்தம்" என, *ஆபிரகாம்* கூறியது போல், கர்த்தர் தனிப்பட்ட உறவில் நமக்கு கூறும் வாக்குதத்தமே "உமது வாக்குதத்தம்" என உயிரோட்டமாய் நமக்கும் மாறுகிறது!

எப்படியெனில், ஆபிரகாமுக்குத் தேவன் வாக்குதத்தம் பண்ணின போது, ஆணையிடும்படி தம்மிலும் பெரியவர் ஒருவருமில்லாத படியினாலே தமது பேரிலேதானே ஆணையிட்டார்! (எபி.6:13). 'தன்னையே தந்து' வாக்குதத்தம் செய்த விந்தையைப் பாருங்கள்.

இந்த விந்தையை அவரது வாக்குதத்தத்தில் கண்ட எந்த ஒரு பக்தனும், காலங்கள் எவ்வளவு தாமதித்தாலும், கர்த்தர் நிறை வேற்றுவார் என்பதில் அசையாத விசுவாசம் கொண்டிருப்பான்!

அவர் தமது பேரிலேதானே ஆணையிட்டு வாக்குரைத்தபோதும், நாம் "நிறைவான ஆறுதலைப் பெறும்படி" இரண்டு மாறாத விசேஷங் களினால் வாக்குரைத்தார் என எபிரெயர் 6:18 கூறுகிறது: 1) அவரது நாமத்தினால் 2)அவரது வார்த்தையினால் என்ற மாட்சிமையே "எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன்" என்ற உறுதித்தன்மையை நம் யாவருக்கும் விளங்கச் செய்தார்! அந்த 2-விசேஷங்கள் இணைவதுதான் "உமது வாக்குதத்தங்கள்" என்ற உரிமையை நமக்கு சொந்தமாக்குகின்றது! இனி முதற்கொண்டு, இத்தனை மேன்மையான "உமது வாக்குதத்தங்கள்" நமது ஜீவியத்தின் அலங்காரமாய் மாறிட, தேவன் யாவருக்கும் கிருபை செய்வாராக!

**- ரத்னம்**